# ஒருமை என்னும் உயர் ஞானம்

- ரஷா

## முன்னுரை

*1998 பிப்ரவரியில், ஒருமையுடனான என் முதல் உரையாடல் நிகழ்ந்தது. “ஒருமை என்றால் என்ன?” மௌனமாய்க் கேட்டேன். “நீ கடவுளா”.*

*“கடலுக்கும் நீர்த்துளிக்கும் உள்ள உறவுதான், ஒருமைக்கும் உனக்குமான உறவு. ஒவ்வொரு நீர்த்துளியிலும் உள்ளது, முழுமையின் சாரம். கடவுளா எனில் - ஆம்! நாம் கடவுள். நாமே ஒருமை” பொட்டிலடித்தாற்போல் பதில் வந்தது.*

*அன்று தொடங்கியது, அற்புதமான ஓர் உறவு. என் விழிப்புணர்வின் புனிதத்தோடு நான் கண்டுணரும் காதல்கதை இன்றளவும் தொடர்கிறது. அந்த விநாடியில் நான் தொடங்கிய காவியப் பயணத்தில், இந்தப் புத்தகத்தில் காணப்பெறும் போதனைகளை எழுதத் தொடங்கியதோடு அனுபவ நிலையிலும் உணரத் தொடங்கினேன். அன்பின் அரும்பணியாய் கண்டறிதலின் பெரும் பயணமாய் நான்காண்டுகளில் இந்தப் பணி நிறைவு பெற்றது.*

*அதற்குமுன், என் வாழ்க்கை இப்படித் தலைகீழாய்த் திரும்புமென்று, நான் கனவிலும் நினைத்ததில்லை. அது ஓர் அதிசயம். இந்தப் போதனைகள் வழியாக, நாம் யார் என்றும், நம்மைச் சுற்றியுள்ள உலகம் அதனைப் பிரதிபலிப்பதையும் புதிய கண் கொண்டு காணும் வாய்ப்பை, மனிதகுலத்திற்கு ஒருமை வழங்கியது.*

*இதில் எனக்கான அம்சங்கள் என்னவாக இருக்கும் என்ற சந்தேகம் சிறிதுமின்றி, இந்த பிரம்மாண்டத்தை எதிர்கொள்ள, பத்தாண்டுகளாகவே என்னை மிகுந்த கவனத்துடன் தயார் செய்து கொண்டிருந்தேன். 1987ல், டென்னிஸியில், அழகியதொரு கோடை நாளில், இந்துக்களின் கடவுளாகிய இராமன், “உன்னை நான் நேசிக்கிறேன்” என்று மெல்ல முணுமுணுக்கவும், என் அநாகதச் சக்கரத்தில் அதிர்வலைகள் எழும்பின. அதுவரை, சராசரியாகத் தோற்றமளித்த என் உலகம் பரந்து பட்டதாய்த் திறந்தது. நாஷ்விலில் பாடல் எழுதுபவளாக, ஓர் அஞ்சலுறையின் பின்புறத்தில் நான் அப்போது கிறுக்கிய காதல் கவிதை ஒன்றில் நான் கரைந்து கொண்டிருந்தேன். விநாடிப்பொழுதுக்குள், எங்கிருந்தோ டெலிபதி முறையில் என் மனதில் வந்து நிறைந்த ஆன்மீகக் கோட்பாடுகளில் விந்தை உலகில் விழுந்தேன். அந்தக் கோட்பாடுகள், வாழ்க்கையைப் புதிய கண் கொண்டு காண எனக்கு உதவின.*

*அடுத்து வந்த ஆண்டுகளில், அமிதாப்பிடமிருந்து நான் பெற்ற போதனைகளை, “எல்லையில்லாத ஒளியின் கடவுள்” என்ற தலைப்பில், நூற்றுக் கணக்கான பக்கங்களில் எழுதத் தொடங்கினேன். என் ஆன்மீக குருவுக்கு மிகவும் பிடித்தமான அம்சம் அது. தெய்வீக வழிகாட்டுதலின் தகவல்களைப் பல்லாண்டுகளாகக் கொண்டுவந்து சேர்க்கும் பணியில் இருந்தும், ஒருமையின் தாக்கத்தை உணரவும் அப்போதுதான் தொடங்கியிருந்த இந்த மகத்தான பெரும் பயணத்தை நிகழ்த்தவும், வேறேதும் எனக்குத் துணை புரிந்திருக்காது.*

*இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பதட்டங்களிலும், அனுபவ நிலையிலான மகத்துவப் பயணத்தின் வெவ்வேறு நிலைகளிலும் ஒருமை என்னைப் படிப்படியாக வழிநடத்த, அந்தக் கோட்பாடுகளை நான் மிகுந்த கவனத்துடன் ஒவ்வொரு சொல்லாக, நேர்முக செயலரைப்போல் கணினியில் பதிவு செய்தேன். இத்தகைய கோட்பாடுகளை நான் இதற்குமுன் எதிர்கொண்டதில்லை. வாழ்க்கை என்று எதை அழைக்கிறோமோ, அதன் தாத்பர்யத்தை முற்றிலும் புதிய புரிதலோடு புரிந்து கொள்வதற்கு அடித்தளமாகவே, என்னைப் பயன்படுத்தி என் வழியாகத் தன்னை ஒருமை எழுதிக் கொண்டது என்பதை உணர்ந்தேன்.*

*இதன் உள்ளடக்கங்கள் வளர வளர எழுத்தில் நான் வடித்துக் கொண்டிருப்பதைப் பொருளளவில் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எனக்குள் என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதை, எனக்கும் இந்த உலகுக்கும் என்னால் இப்போது விவரிக்க முடியுமென்றாலும் கூட அப்போது அவற்றை உணர்தலின் வட்டத்திற்குள் கொண்டு வர சிறிது சிரமப்பட்டேன். “தவறாய்ப் போகக் கூடியவை எல்லாமே தவறாய்ப் போகும்” என்ற மர்ஃபியின் விதிமுறைக்கோர் உதாரணமாய் என்னுடைய வாழ்க்கை இருந்தது.*

*“நான் என்ன தவறு செய்தேன்” ஒருமையிடம் நான் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தேன். “ரஷா! நீ வாழ்ந்து பாராத ஒன்றை நீ போதிக்க முடியாது” இந்த மந்திரம் தான் எனக்குக் கிடைத்த பதிலில் எண்ணிலடங்காத முறை ஒலித்தது. அதன் பிறகு, மெல்ல மெல்ல வாழ்வின் யூகிக்கக்கூடிய நாடகங்களிலும், வாழ்க்கை முழுமைக்குமான குழப்பங்கள், சோர்வுகள் என்று ரங்கராட்டினத்தில் ஏறியது போன்ற விதம்விதமான அனுபவங்களின் அர்த்த அடர்த்திகள் பிடிபடத் தொடங்கின.*

*அதே நேரம், நானறிந்த உலகம் என் கண்முன்னே மாறிவருவதை உணர்ந்தேன். நான் வந்து பிறந்தபோது இருந்த உலகம் இதுவல்ல என்கிற அதிரவைக்கும் உண்மையை உணர்ந்து கொண்டேன். பரிணாமத்தின் போக்கில், நிதர்சனத்தின் நீர்மைத் தன்மையை இந்த போதனைகள் வழியாகப் புரிந்து கொண்டேன். வாழ்வின் ஆதார விதிகள் என்று அறிவிக்கப்பட்டவை இப்போது செயல்படவில்லை. ஏனென்று குழம்பிப் போனேன்.*

*என் தர்க்க அறிவிலிருந்து நதிபோல் பெருகிய கேள்விகளோடு நான் போராடிக் கொண்டிருந்தபோது, இன்றைய உலகின் எல்லா நடப்புகளையும் கால எல்லைக்கு அப்பாற்பட்ட சக்திநிலையின் அடிப்படையில் புரிந்து கொள்ள, ஒருமையின் போதனைகள் எனக்குள் அடித்தளமிட்டன. படைக்கப்பட்ட எல்லா உயிர்களையும், அதிர்வின் விசை ஒருமை நோக்கியே ஆற்றுப்படுத்துவதையும், அதே அதிர்வுகளை மனிதர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் அனுபவித்து வருவதையும், ஒருமை எனக்கு விளக்கிற்று. உந்திச் செலுத்தப்பட்ட அதிர்வுகளின் தாக்கமே நான் பார்க்குமிடமெங்கும் மனித அனுபவங்களாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதை உணர்ந்தேன்.*

*நம் உண்மைத் தன்மையை அதிர்வுகள் வழியே நாம் எப்படி வெளிப் படுத்துகிறோம், வாழ்க்கை அனுபவங்களுக்கு நம் உணர்வு சார்ந்த எதிர்வினை எப்படி செயல்படுகிறது என்கிற நுட்பங்களெல்லாம் எனக்குப் புரியத் தொடங்கின. இறைநிலை நோக்கிச் செல்லுதல், உண்மையின் பல்வேறு தளங்களுக்கு நிலை மாறுதல் போன்றவற்றின் அறிகுறிகள் என்னைச் சுற்றித் தோன்றத் தொடங்கின. குறியீடுகளைக் கண்டுணர்ந்து, போதனைகளை நடைமுறைப்படுத்தி அவற்றின் சாத்தியக் கூறுகளைக் கண்டுணரத் தொடங்கினேன்.*

*சிறிது காலத்திற்குப் பிறகு, நான் வியப்படையும் விதமாக, வாழ்வின் மிகச் சாதாரணமான சில அம்சங்கள் எவற்றுக்காக நான் போராடி வந்தேனோ, திரும்பத் திரும்ப தோன்றிய அந்த அம்சங்கள் மிக எளிதானவையாகி விட்டன. காலப்போக்கில் அத்தகைய அனுபவங்கள் நிகழ்வது முற்றாக நின்று போயின. இது ஓர் அதிசயம்.*

*இந்தப் புத்தகத்திலிருக்கிற போதனைகள், என் மனிதத் தன்மையின் வெளிப்பாடுகளுக்கும் எனக்குள் நான் உணர்ந்த புனிதத்தன்மையின் ஆழங்களுக்கும் என்னைக் கொண்டு சென்றன. இந்த அற்புதமான பயணம் முழுமையையும் உள்ளடக்கியுள்ள ஒருமைதான், உலகிலுள்ள நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் ஒற்றைச் சரடு. அதன் தாக்கம் விவரிக்க முடியாதது. அதனை என்னால் கற்பனை கூடச் செய்திருக்க முடியாதென்பதை நாளும் பெருகும் ஆனந்தக் கண்ணீருக்கு நடுவே நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.*

*இந்த அதீதமான காலங்களில் இங்கே ஸ்தூல வடிவில் வருவதற்கு நாம் தேர்வு செய்துள்ளதன் முக்கியத்துவம் இப்போது எனக்குப் புரிகிறது. கற்றுக் கொண்ட செய்தியாகவோ, என் மனதைத் தூண்டிய தத்துவமாகவோ இல்லாமல் ஒரு புரிதலாக, எனக்குள்ளிருந்து நான் கண்டுணர்ந்த, கால எல்லை கடந்த அறிதலாக அது நிகழ்ந்தது. எனக்குப் பெரிய ஆசீர்வாதமாக நிகழ்ந்திருக்கும் ஒருமையைப் போலவே அதுவும் அனுபவித்து உணர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.*

- ரஷா